Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 469/2025
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 02 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜெகன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. குமார் | தொழில் | தலைமைக்காவலர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 35 |
| எதிரி ஆஜர் | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20th February day of 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.2 திரு. ஜெகன் முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.11.2023 அன்று காலை 9.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திருமதி சிவண்யா தலைமையில் நானும் தலைமைக்காவலர் திரு.கல்யாணக்குமார் என்பவரும் திருப்பத்தூர் கௌதம் பேட்டை மார்கம் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து பணி மேற்கொண்டிருந்தோம். அப்போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரி அவரது வீட்டிடம் நின்றவர் எங்களை கண்டதும் ஓடினார். பின்னர் அவரை மடக்கி பிடித்து விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால். அவர் இருந்த இடத்தை சோதனை செய்த போது Dimond XXX Rum– 3 மற்றும் OLD Scret STrong XXX Rum 96 பாக்கெட்டுகள் வைத்திருந்தார். மேலும் அந்த பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக அவர் கூறியதால் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வரததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார்

செய்தார். பின்பு காவல் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் இருந்து காலை 9.00 மணிக்கு சென்றோம். மூன்று நபர்களும் மூன்று இருசக்கர வாகனத்தில் சென்றோம். எங்கு ரோந்து பணியில் ஈடுபட்டேம் என்றால் கௌதம் பேட்டையில் ஈடுபட்டேம். ரோந்து பணிக்கு சென்ற போது பேருந்து டிப்போ அருகே சற்று நேரம் இருந்து விட்டு சென்றோம். எதற்காக அங்கு இருந்தீர்கள் என்றால். அந்த வழியாக தான் எதிரி தன் வீட்டிற்கு செல்வார் அதனால் அங்கு இருந்தோம். எதிரியின் வீடு முன்பே தெரியுமா என்றால் தெரியாது, இரகசிய தகவல் கிடைத்ததால் சென்றோம். கௌதம் பேட்டையில் சுமார் 250 வீடுகள் இருக்கும். அங்கு அனைத்துவிதமன வீடுகளும் இருக்கம் என்றால் சரிதா்ன. பேருந்து டிப்போ தான்டியதியதில் இருந்தே வீடுகள் ஆரபித்துவிடும் என்றால் சரிதான். அந்த பகுதியில் உள்ள சிலருக்கு நாங்கள் போலீசார் என்ற விவாரம் தெரியும் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் என்னை சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார். எனது வாக்குமூலத்தை சம்பவ இடத்தில் வைத்தே தட்டச்சு செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றபட்ட மதுபானத்தின் வரிசை எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் புள்ளிவிவரத்திற்காக தொடுத்த வழக்கிற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த வித சம்பதம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.